**செய்தி வெளியீடு எண்: 532** **நாள்: 11.03.2024**

# செய்தி வெளியீடு

மாணாக்கர்களின் அறிவை வடிவமைப்பதிலும், அறிவியல் கற்றல் மீதான ஆர்வத்தை வளர்ப்பதிலும், உயர் கல்வியில் மாணாக்கர்கள் அறிவியல் துறையினை தேர்ந்தெடுப்பதற்கும் மற்றும் அறிவியலாளர்களாக உருவாகுவதற்கும் அறிவியல் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அறிவியல் ஆசிரியர்களின் விலைமதிப்பற்ற பணிகளை அங்கீகரிக்கும் விதமாக அறிவியல் நகரம் 2018–2019 முதல் சிறந்த அறிவியல் ஆசிரியர் விருதுகளை வழங்கி வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டிற்கான தமிழ் நாட்டில் உள்ள உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி அளவில் அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் அறிவியல் ஆசிரியர்களிடம் இருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 2022–2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த அறிவியல் ஆசிரியர் விருதுக்கு இரண்டு அறிவியல் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2022–2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த அறிவியல் ஆசிரியர் விருதை மாண்புமிகு உயர்கல்வித் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள், உயர்கல்வித் துறை முதன்மைச் செயலர் திரு. ஆ.கார்த்திக், இ.ஆ.ப., மற்றும் அறிவியல் நகரம், முதன்மைச் செயலர்/துணைத் தலைவர் திரு. தேவ் ராஜ் தேவ், இ.ஆ.ப., ஆகியோர்களின் முன்னிலையில் இன்று (11.03.2024) சென்னை தலைமை செயலகத்தில் வழங்கினார்கள். விருது பெற்றவர்களின் விவரம் பின்வருமாறு:

1. இயற்பியல் துறையில் திருமதி ச.ர.பிந்துலேகா, முதுகலை ஆசிரியை, அரசு மேல்நிலைப்பள்ளி, கொட்டாரம் – 629 703, கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.
2. உயிரியல் துறையில் திருமதி சு.சங்கீதா, பட்டதாரி ஆசிரியை, அரசு மேல்நிலைப்பள்ளி, சேடப்பட்டி – 625 527, மதுரை மாவட்டம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது பெற்றவர்களுக்கு மாண்புமிகு உயர்கல்வித் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் தலா ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in